# இரைப்பை புற்றுநோய்க்கு சிகிச்சை?

## கே.எம்.சி.எச்., சூலூர் மருத்துவமனை டாக்டர் செல்வரத்தினம் பதில்கள் (2ம் பகுதி)

**கோவை, ஜூன் 3:**இரைப்பை புற்றுநோய் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு கே.எம்.சி.எச்., சூலூர் மருத்துவமனையின் இரைப்பை புற்றுநோய் லேபராஸ்கோபி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வரத்தினம் அளித்த பதில்கள்:



டாக்டர் செல்வரத்தினம்

***இரைப்பை புற்றுநோய்க்கான பொதுவான அறிகுறிகள் என்ன...**

ஆரம்ப கட்டத்தில் குறிப்பிட்டு சொல்லும்படியான எந்த அறிகுறிகளும் தென்படுவதில்லை. நோயாளிகள் வயிற்றில் செரிமான கோளாறு, அடிவயிற்றில் அசவுகரியம், வயிற்றுப்புண் ஏற்படுத்தும் வலி, வயிற்றில் லேசான எரிச்சல், அந்த வலி தொடர்ச்சியானதாகவும் இருக்கலாம். புற்றுநோய் முற்றிய பிறகு உடல்எடை குறைதல், பசியின்மை, சோர்வு, வாந்தி, கருப்பு நிறத்தில் மலம் கழித்தல் ஆகியன ஏற்படலாம். அறிகுறிகள் எந்த அளவில் இருந்தாலும் மருத்துவரையோ, இரைப்பை குடல் நிபுணரையோ அணுகி சிகிச்சை பெற வேண்டும்.

***இரைப்பை புற்றுநோயை உறுதிப்படுத்த மருத்துவர் என்ன சோதனையை மேற்கொள்வார்....**

இரைப்பை புற்றுநோய்க்கான பொதுவான பரிசோதனை முறைகள் எண்டோஸ்கோபி மற்றும் பயாப்ஸி ஆகியன ஆகும். வயிற்றுப்பகுதியில் இயல்புக்கு மாறாக கட்டிகள், புடைப்புகள் இருந்தால் ஆராய்ச்சிக்கு உட்படுத்துதல் வேண்டும்.

வயிற்றில் அல்ட்ரா சவுண்ட் சோதனை மற்றும் சிடி ஸ்கேன் சோதனை மற்றும் நெஞ்சுப்பகுதியில் எக்ஸ்ரே சோதனை ஆகியவற்றை செய்து புற்றுநோயின் தாக்கத்தை தெரிந்து கொள்ளலாம். இதை தொடர்ந்து சில சமயங்களில் இரைப்பையின் வெளிப்புறத்தில் புற்றுநோய் பரவி இருப்பதை ஆய்வு செய்ய லேப்ராஸ்கோபி சோதனை முறையை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

*** இரைப்பை புற்று நோய்க்கு என்னென்ன சிகிச்சை முறைகள் உள்ளன...**

இரைப்பை புற்று நோய்க்கு அறுவை சிகிச்சை மட்டுமே நம்பிக்கையான தீர்வு. 20 சதவீதத்திற்கும் மேலான நோயாளிகளுக்கு நோயின் பரவும் தன்மையால் அறுவை சிகிச்சை செய்ய முடிவதில்லை. மீதம் உள்ள 80 சதவீத நோயாளிகளுக்கு மட்டுமே அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

இரைப்பை புற்றுநோயை பொறுத்த வரை பாதிக்கப்பட்ட பகுதியை அறுவை சிகிச்சை செய்வதே பொதுவான சிகிச்சை முறையாகும். மேலும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்து (கீமோதெரபி) சிகிச்சையை மேற்கொள்ளலாம். அறுவை சிகிச்சை செய்ய உடல் தகுதி இல்லாதவர்களுக்கு புற்றுநோய் கட்டிகளால் ஏற்படும் அடைப்புக்கு ஸ்டென்ட் வைத்து கொள்ளலாம். புற்றுநோய் கட்டியில் இருந்து அதிக இரத்தப்போக்கை கட்டுப்படுத்த கதிர்வீச்சு சிகிச்சை செய்து கொள்ளலாம். இவ்விரண்டும் நவீன முறையாகும். எனவே இரைப்பை புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்தால் சரியான சிகிச்சையளித்து குணப்படுத்தலாம். அதன் மூலம் நீண்ட ஆயுளையும் பெறலாம்.

மேலும் விபரங்களுக்கு, இரைப்பை புற்றுநோய் லேபராஸ்கோபி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வரத்தினம், கே.எம்.சி.எச்., சூலூர் மருத்துவமனை, திருச்சி ரோடு, சூலூர் 641402. போன் : +91 422 2682940, இ-மெயில் : *kmchsulur@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

–Advt